[1972 ஏப்ரல் 3

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்படிப்பட்ட மாவட்ட மெடிக்கல் காலேஜ் ஆஸ்பத்திரிகளி எல்லாம் ஓ.பி. ஆரம்பிக்கப் படுவதில் என்ன சங்கடங்கள் இருக்கின்றன ? ஏன் மீண்டும் புனராலோசனை செய்து அப்படி ஆரம்பிக்க வழிவகை செய்ய இயலாதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தஞ்சையில் இருக்கிற மருத்துவ கல்லூரியைச் சேர்ந்த மருத்துவமனை என்பது நஞ்சை நகரத்திற்கு அப்பாற்பட்ட ஒரு பகுதியில் அமைக்கப்பட்டிருக் கிறது. தஞ்சை நகரத்திற்குள் ராஜா மிராசுதார் மருத்துவமனை என்ற ஒரு பெரிய மருத்துவமனை இருக்கிறது. வெளிநோயாளிகள் அனைவரும் ராஜா மிராசுதார் மருத்துவமனையில் கவனிக்கப்படு கிறார்கள். அங்கு சில குறிப்பிடப்பட்ட துறைகளில் இன்னின்ன வகையான நோய்களுடையவர்கள், சிறப்பாக ரெஃ பரல் அவுட் பேஷியன்ட்ஸ் என்ற முறையில் அனுப்பப்படுகிறவர்கள் கல்லூரி மருத்துவ மனையில் கவனிக்கப்படுகிறார்கள். பொதுவான வெளி நோயாளிகளுக்கு நகரிலுள்ள ராஜா மிராசுதார் மருத்துவமனையே பணியாற்றி வருகிறது.

* 845. வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையை விரிவு படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மருத்துவக் கல்வி இயக்குநர், புதிய கட்டடத்திற்கான தேவையை விரிவாக விளக்கியும், தற்போதைய தேவைகளுக்கேற்பத் திருத்திய மதிப்பீட்டுடன் கூடிய வரைவு படத்துடன் அரசின் பரிசீலனைக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir is there a proposal to start another Women and Children's Hospital in North Madras to relieve the congestion at Egmore?

1972 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்தக் கேள்வி மகப்பேறு மருத்துவமனைபற்றியது. மகப்பேறு மருத்துவமனை இப்போதே வடசென்னையில் ஸ்டான்லி மருத்துவமனையோடு இணைக்கப்பட்ட ஒரு மருத்துவமனையாக இயங்கி வருகிறது.

திரு வை. பாலசுந்தரம்: சென்னை மாநகராட்சி மன்றம் ஏராளமான மகப்பேறு மருத்துவமனைகளை நடத்தி வருகிறது. நிதிப் பற்றுக்குறை காரணமாக சென்னை மாநகராட்சி மன்றம் சங்கடப்படுவதை மீட்டுத் தருவதற்கு சென்னை மாநகராட்சி மன்றம் நடத்துகிற மகப்பேறு மருத்துவ மனைகளை அரசே ஏற்று நடத்துமா? அப்படி நடத்தவில்லை என்றால் மானியமாவது வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாநகராட்சி மன்றத்திற்கு நிதிப் பற்றுக்குறை என்று உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். இங்கேயும் அதே கதைதான்.

* 846 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(a) whether the proposals to provide about 40 beds in the Maternity Ward in the Government Hospital in Hosur Town has been finalised; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) அத்தகைய திட்டமொன்றும் அரசிடமில்லை.

* 847. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதியில் மருத்துவ வசதி பற்றுக்குறைவினைப் போக்கிடப் புதிய மருத்துவமனைகளைத் துவக்கிட அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.